# கிருபையிதே தேவ கிருபையிதே

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவியப் பாதையிலே இயேசு பரன்
அனுதினமும் வழிநடந்தே
அவரது நாமத்திலே காத்தனரே

அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துரை – அனுக்ரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய்

நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் பற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினைக் காத்துக் கொள்வோம்

வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் – வைத்தியராய்
இயேசு வல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை